**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.127/2020**

**PW10**

| | | |
|---|---|---|
| **Name** | : | V.E. செந்தில் |
| **Father's Name** | : | ஏகமூர்த்தி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.01.2026.
A1 to 7 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை மாநகரில் மத்திய குற்ற பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிகிறேன். கடந்த 05.12.2017 அன்று நான் வேட்டவலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 4.00 மணிக்கு ஜெயசீலன் கிராம நிர்வாக அலுவலர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் அந்நிலைய குற்ற எண். 869/2017 சட்டப்பிரிவுகள் 302,201 இதசப்படி வழக்கு பதிவு செய்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை நீதித்துறை நடுவர் எண்.2, திருவண்ணாமலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் மற்ற நகல்களை இதர அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.16.** இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடமான செல்லங்குப்பம் கிராமம், புதிய காலனியின் 3 வது தெருவில் உள்ள சண்முகம் என்பவருக்கு சொந்தமான அரசு ஒதுக்கிய தொகுப்பு வீட்டிற்கு சென்று சாட்சிகள் தேவதாஸ் மற்றும் தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ. 17**. அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ. 18**. சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையொப்பம் பெற்று அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தும், மகசரில் சம்பவ இடத்தில் இருந்த 3 மண்ணெண்ணெய் கேன்கள் (10 லி கொள்ளவு-1 , 5 லிட்டர் கொள்ளவு கொண்ட கேன் -1 மற்றும் 2 லிட்டர் கொள்ளவு கொண்ட வெள்ளை நிற கேன் -1) ரத்தக்கறை படிந்த மண் சிறிது, ரத்தக்கறை படிந்த ஜல்லி துண்டுகள் மற்றும் பெண்கள் அணியும் ரோஸ் கலர் செருப்பு 1 ஆகியவற்றை

மகசர் 1-ல் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.19**. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 3 மண்ணெண்ணெய் கேன்கள் தான் அவை. 10 லி கொள்ளவு கொண்டது அ.சா.பொ.5 , 5 லிட்டர் கொள்ளவு கொண்ட கேன் **அ.சா.பொ.6.** மற்றும் 2 லிட்டர் கொள்ளவு கொண்ட வெள்ளை நிற கேன் **அ.சா.பொ.7.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரத்தக்கறை படிந்த ஜல்லி பொட்டலங்கள் **அ.சா.பொ.8** மற்றும் பெண்கள் அணியும் ரோஸ் கலர் செருப்பு 1 **அ.சா.பொ.9 .** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரத்தக்கறை படிந்த மண் கொண்ட சிறிய பொட்டலம் **அ.சா.பொ.10**. சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும் மகசர் 2-ல் அதே சாட்சிகளின் முன்னிலையில் ரத்தக்கறை மற்றும் புகை படிந்த சிமெண்ட் காரை துண்டுகள், சாதாரண புகை படிந்த சிமெண்ட் காரை துண்டுகளை ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பபற்றுதல் மகசர் அ.சா.பொ.20. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரத்தக்கறை மற்றும் புகை படிந்த சிமெண்ட் காரை துண்டுகள் **அ.சா.பொ.11**. சாதாரண புகை படிந்த சிமெண்ட் காரை துண்டுகள் **அ.சா.பொ.12**. பின்பு சாட்சிகள் ஜெயசீலன் , பாண்டியன், பரசுராமன், ராஜாமணி, அரிகோபால், பிச்சைக்காரன் , தேவகுமார், தேவதாஸ், தேவராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ இடத்தில் இருந்த இறந்த சிவா (எ) எமகா சிவாவின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ. 21. சாட்சிகள் சரளா, சண்முகம், காளியாம்மாள், முருகேசன், ராஜேஸ்வரி, சந்தியா ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்த சிவா (எ) எமகா சிவாவின் பிரேதத்தின் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தினை காவலர் 793 நந்தகுமார் என்பவர் மூலமான திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் இறந்துபோன சிவா (எ) எமகா சிவாவை முன் விரோதத்தின் காரணமாக செல்லங்குப்பத்தை சேர்ந்த எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தடி மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களால் சிவாவை சண்முனம் வீட்டின் அருகே தாக்கி கொலை செய்து உடலை சண்முகத்தின் வீட்டினுள் போட்டு விரகுக்கட்டைகள் மற்றும் மண்ணெண்ணெய் ஊற்றி எறித்துள்ளார்கள் என்று தெரியவந்தது. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடி சென்ற நிலையில் 07.12.2017 அன்று கீரலூர் பஸ் நிறுத்தம் அருகில் இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் காவலர்களுடன் சென்று தகவலாளி அடையாளம் காட்டியதன் பேரில் அங்கு இருந்த எதிரிகள் காளி, குப்பம்மாள், லதா ஆகியோரை விசாரித்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் அவர்களை கைது செய்தேன். பின்பு எதிரிகள் காளி மற்றும் குப்பம்மாள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை தகவலின் பேரில் அங்கு வந்த கிராம நிர்வாக அலுவலர் ஜகதீசன், மற்றும் கிராம உதவியாளர் பாபுசத்சீசன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி காளி தனது

ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் பயன்படுத்திய முள்வேலி தடி கொம்பை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.**22. எதிரி குப்பம்மாள் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் பயன்படுத்திய முள்வேலி தடி கொம்பை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.23.** எதிரிகள் மற்றும் சாட்சிகளுடன் செல்லங்குப்பம், புதியகாலனிக்கு மேற்கில் உள்ள இடத்திற்கு சென்று பெரிய குளக்கரையில் உள்ள முட்புதரில் இருந்து எதிரி காளி எடுத்து ஆஜர் செய்த முள்வேலி கொம்பு ஒன்றினை சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.**24. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அன்று எதிரி காளி அடையாளம் காண்பித்தது ஆஜர்படுத்தி, கைப்பற்றப்பட்டது . அது **சா.பொ.**13. பின்பு எதிரி குப்பம்மாள் பெரிய குளக்கரையில் உள்ள காட்டுமரத்தின் கீழே இருந்து எதிரி குப்பம்மாள் எடுத்து ஆஜர் செய்த முள்கொம்பு ஒன்றினை சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.**25. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அன்று எதிரி குப்பம்மாள் அடையாளம் காண்பித்தது ஆஜர்படுத்தி, கைப்பற்றப்பட்டது . அது **சா.பொ.14.** கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து சாட்சிகள் ஜெகதீசன் மற்றும் பாபுசத்சீசனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்கண்ட எதிரிகளை திரேத பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தின் மீது இருந்த இறந்துபோன சிவா கருகிய நிலையில் இருந்த மேல் சட்டையை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். தற்போது காண்பிக்கப்படுவதுதான் அந்த கருகிய நிலையில் உள்ள சட்டை. அது **அ.சா.பொ.**15. மேலும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். 08.12.2017 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளை தேடி வந்தபோது தகவலின்பேரில் காலை 6.30 மணிக்கு சாணிப்பூண்டி கூட்ரோடில் இருந்த எதிரிகள் ஜெயராமன், குமரவேல் (எ) வேலன், கார்த்திக், முனுசாமி (எ) துரை ஆகிய எதிரிகளை விசாரித்து முறைப்படி கைது செய்தேன். பின்பு தகவலின்பேரில் அங்கு வந்த வி.ஏ.ஓ ஜெகதீசன் மற்றும் உதவியாளர் சிவராமன் ஆகியோர் முன்னிலையில் எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரிகள் மற்றும் சாட்சிகளுடன் செல்லங்குப்பத்திற்கு புறப்பட்டு சென்று 08.12.2017 அன்று பகல் 12.15 மணிக்கு செல்லங்குப்பம் - வேலானந்தல் ரோட்டில் வலதுபுறம் உள்ள செல்லாத்தம்மன் கோவிலுக்கு அருகே உள்ள முட்புதரிடம் எதிரி ஜெயராமன் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்செய்த கத்தி ஒன்றினை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு

08.12.2017 அன்று 13.00 மணிக்கு செல்லங்குப்பம் - பவித்திரம் ரோட்டில் இடது புறம் உள்ள செல்லங்குப்பம் ஏரிக்கரையில்  ஆலமரத்திற்கு அருகே உள்ள முட்புதரிடம் எதிரி குமரவேல் (எ) வேலன் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்செய்த குத்துகத்தி ஒன்றை மகசரில் கைப்பற்றினேன். பின்பு அதே தினத்தில் 13.45 மணிக்கு செல்லங்குப்பம் - பவித்திரம் செல்லும் ரோட்டில் வலதுபுறம் செல்லங்குப்பம் கிராமத்தை சேர்ந்த விஸ்வநாதன் த.பெ. பொன்னுசாமி என்பவர் இடத்தில் உள்ள வேலிக்கத்தான் முட்புதரிடம் இருந்து எதிரி கார்த்திக் என்பவர் அடையாம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வெட்டுக்கத்தி ஒன்றை கைப்பற்றதல் மகசரில் கைப்பற்றினேன். பின்பு அதே தினம் 14.30 மணிக்கு செல்லங்குப்பம் - திப்பக்காடு செல்லும் ரோட்டில் இடது புறம் உள்ள முனுசாமி என்பவரின் நிலத்திற்கு மேற்கே உள்ள ரயில் பாதைக்கு அருகே உள்ள முட்புதரில் இருந்து எதிரி முனுசாமி (எ) துரை  அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த குத்து கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன்.  அனைத்து கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றும் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் மற்றும் சாட்சிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை முறைப்படி திரேக பரிசோதனை செய்து, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தபின் எதிரிகளை  நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.  வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.  இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ரத்தக்கறை படிந்த மண், ஜல்லி துண்டுகள், பாறை துண்டுகள், மேல்சட்டையில் இருந்து கருகிய நிலையில் இருந்த சிறிய பாகம் மற்றும் ரத்தக்கறை படியாத காரை துண்டுகளை நீதிமன்றம் மூலமாக வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் பணி உயர்வு மற்றும் மாறுதல் காரணமாக வழக்குகோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Taken down by me in Open Court read over of the witness and to  acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.